முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1036

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

31.07.2022, ஞாயிற்றுக்கிழமை

1. கருணைக்கடலே அரங்கா போற்றி
கலியுகத்தின் காப்பே அரசா போற்றி
பழிபாவம் நீக்கி உலகமக்களை
பாதுகாக்க வந்த ஞானதேசிகனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 15 நாள், 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
ஆற்றல்பட அரங்கனுக்கு சக்தி கூடவும்
அகிலமெங்கும் அரங்கன் வலம் வந்து இந்த உலகை காக்கவும்
3. காக்கவே ஆறுமுகப்பெருமான் யான்
கருணைகொண்டு அரங்கனோடு இணைந்துள்ளேன்
தேக்கமின்றி அரங்கன் தர்மம் வளரவும்
தொண்டர்படைகள் உலகமெங்கும் பரவவும்
4. ஆற்றல்பட ஆறுமுகன் யான் சூட்சுமமாக சேவை
அரங்கனுள் இருந்து ஆற்றி வருகின்றேன்
வருகவே அரங்கன் நாமஜெபம் சொல்லும் இடமெல்லாம்
வடிவேலன் என் அருளும் தயவும் உண்டு உண்டு
5. தருகின்ற அரங்கன் நாமம் சொல்லி செய்யும்
தர்ம தடங்கள் அத்தனையிலும்
ஆறுமுகப் பெருமான் யான்
இருந்து அற்புதம் நிகழ்த்துவேன்
6. ஐயமற அரங்கன் தர்மம் வளரவளர
உலகோர்க்கு அருள்ஞானம் இலகுவாக சித்திக்க நேரும்
நேர்மைபட உலக மக்களுக்கு மனமாற்றம்
நிலமதனில் அரங்கன் கொள்கையால் உருவாக்கப் பட்டு
7. வகைபட சடுதி உலகமாற்றம் வடிவேலன் என் ஆசியாக
அரங்கன் அவதார நோக்கமாக பூர்த்தியாகும்
ஆகவே அரங்கமகானைத் தொடர்ந்து உலகோர் வருகவருக
இந்த அற்புதம் சடுதி நிகழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–